மலர் 1 இதழ் 1 ஜூலை, 2016 ISSN : 2454-3993

# தனிநபர் உளவியல் சங்கப் பிரதிகளை முன்வைத்து...

**"என்னுடைய சிந்தனை எனக்குள் இல்லை. எனக்கு வெளியே இருக்கிறது. நான் என்பதும் எனக்குள் இல்லை. அது எனக்கு வெளியே உள்ளதால் சுயத்தைக் கட்டமைப்பது மற்றமைதான் -லக்கான்"**

**முனைவர் ந. இரத்தினக்குமார்**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த் துறை,
மதுரைக் கல்லூரி, மதுரை

இருபதாம் நூற்றாண்டைப் பரபரப்பிற்கும் கலவரத்திற்கும் உள்ளாக்கிய கொள்கைகளாக ஆல்பர்ட் ஐன்ஸ்டனின் சார்பியல் கோட்பாடு, டார்வினின் உயிர்ப் பரிணமாக் கொள்கை, காரல் மார்க்ஸின் பொருளாதராக் கோட்பாடு, சிக்மண்ட் ப்ராய்டின் உளவியல் கொள்கை போன்றவற்றை அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர். இவற்றில் இலக்கியத்தோடு மிக நெருங்கிய பிணைப்பு கொண்டதாக உளவியல் காணப்படுகிறது. பிராய்டின் உளவியல் கருத்துக்கள் யூங், ஆட்லர், லக்கான், எரிக்போரம், போன்றவர்களால் விரித்தும் மறுத்தும் வளர்ததெடுக்கப்பட்டு, இன்று உளவியல் பரவி நிற்கும் முக்கிய அறிவுத்துறையாக் காட்சியளிக்கிறது. தனிமனிதன் குறித்து உளவியல் முன்வைத்துள்ள கருத்துக்களைக்கொண்டு சங்கப் பிரதிகளை (மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை) வாசிக்க முயலுவோம்.

### காஞ்சியும் வாடையும் முன்வைக்கும் கருத்தியல்கள்

பத்துப்பாட்டில் ஆறாம் பாடலான மதுரைக் காஞ்சி (782 அடிகள்) நிலையற்ற நிரம்பா வாழ்விற்கு அமைதியும், உரமும் வேண்டுதல் பொருட்டு அகவற்பாவைக் கொண்டு மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது. இதில் "நெடுஞ்செழியன் பகைவர் அரண்களையும் காவல் மரங்களையும் அழித்தல், சேர சோழ மன்னரையும் குறுநில மன்னர் ஐவரையும் வெல்லல், பகை நாட்டில் கவர்ந்த பொருள்களை வறியவர்களுக்கு வழங்கல், சான்றோர் வழியில் நடத்தல், வாய்மை–பொற்பு–கொடை முதலிய நல்லியல்புகள் கூறப்பட்டுள்ளன"[1]. பாண்டியனுக்கு அறிவுரை கூற எழுந்த இந்நூல் பத்துப்பாட்டில் மிகப்பெரிய பாடல் என்பதும் கவனிக்கத்தக்கது.

நக்கீரனார் பாடிய ஏழாம்பாடலான நெடுல்வாடை (188 அடிகள்) "தனிமனித உணர்வாகிய காதலும், சமுதாய உணர்வாகிய கடமையும் ஆகிய இருவேறு இயல்புகளை ஆசிரியப்பாவால் விளக்கி உரைக்கும் நூல்"[2]. செவிலித்தாயின் கொற்றவை வழிபாடு, தலைவனைப் பிரிந்து நெடிய வாடையால் வருந்தும் தலைவி நிலை, கூதிர் காலத்தில், மக்கள், விலங்கு, பறவை முதிலியன குளிரால் இயல்புமாறல், பாசறை அமைப்பின் தன்மை, வீரர்களின் ஓய்வு, யவனர்களின் செயல், இயற்கையின் இயல்பு போன்றவை உளவியல்பூர்வமாக விளக்கப்பட்டுள்ளன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கி அவனது வெற்றிச்சிறப்பு, கொடைச்சிறப்பு, நாட்டுவளம், மக்கள்நிலை என இவ்விரு நூல்களும் முன்வைத்திருந்தாலும் இரண்டின் பாடுபொருள்களும் தனிமனித அறத்தை, வலியுறுத்தி,

வாழ்வியல் போதாமைகளை எதிர்கொள்ள மனிதத்திரள் எடுக்கும் முயற்சிகளைப் பிரதானப்படுத்தியுள்ளன, என்பது குறிப்பிடத்தக்கது. அம்முயற்சிகளுக்குப் பின்புலமாக மனிதனின் விருப்புறுதி, சுயஉணர்வு, நம்பிக்கை, குறிக்கோள், ஊக்கம், தற்பாதுகாப்பு, தகவமைப்பு, போன்ற க்ரியா ஊக்கிகள் மறைந்து இருப்பதை அறியமுடிகிறது.

**தனிமனிதத் தன்னிலைகளின் இயல்பும் கட்டமைப்பும்**

மனித மனத்தை ஆழ்மனம் (Id), விழிப்புமனம் (Ego), மேல்மனம் (Super Ego) என மூன்று பகுதிகளாகப் பகுத்துப் புதிய மனோவியல் தேடல்களுக்கு வித்திட்ட ப்ராய்டின் உளவியல் பார்வைகள், அறிவுசார் பரப்பில் புதிய விளைவுகளை ஏற்படுத்தின. பல நவீன உளவியல் அறிஞர்கள் ப்ராய்டின் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு மனிதனின் தன்னுணர்வுச் செயல்பாடுகளைப் பின்கண்டவாறு வகைப்படுத்தினர். இவை, தனிமனிதனின் உளவியலைக் கட்டமைக்கும் தனித்த கூறுகளாகவும் இருக்கின்றன.

அவை:

1. ஆளும்திறன் (astery Competence)
2. சுயமான செயல்கள் (Autonomous Functions)
3. தகவமைக்கும் செயல்கள் (Adaptive Function)
4. ஊக்கிகளை முறைப்படுத்திக் கட்டுப்படுத்துதல் (Regulation And Control of Drives)
5. முடிவெடுத்தல் (Judegement)
6. யதார்த்தம் குறித்த புலன் உணர்வு/நடைமுறை அறிவு (Sense of Reality)
7. தற்காப்புக் கூறுகள் (Elements of Defence)
8. மற்றமை உறவு / பொருள் உறவு (Object Formation)
9. அடையாள உருவாக்கம் (Identity Formation)
10. சிந்திக்கும் முறை (Thought Process)

இப்பண்புகளைச் சிறப்பாகப் பின்பற்றும் மனிதனிடமே ஆளுமைப் பண்பு முழுமையடையும் என்று நம்புகின்றனர், உளவியல் அறிஞர்கள். தன்னம்பிக்கையுடைய மானுடத்திரள்களிடம் காணக்கிடைக்கும் பண்புகளாகவும் இவற்றைக் கருதலாம் என்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

**ஆளுமைத்திறன் (Mastery Competence)**

தனிமனிதனின் செயல்பாடுகளைத் தீர்மானிக்கும் மிக முக்கிய காரணிகளில் ஒன்று அவனது ஆளுமை மேம்பாடு. மனிதனின் ஒழுக்கம், தன்னம்பிக்கை, பண்பாடு, கொடை, வீரம், துணிவு, சிந்திக்கும் முறை (Thought Process) இவற்றைப் பொறுத்து அவனது தன்னம்பிக்கை வெளிப்படுகிறது.[3] 'நடத்தைகளின் குணங்கள், விருப்பு வெறுப்புகள், ஆர்வங்கள், ஊக்கிகள், உலகம் பற்றிய உணர்வுகள் முதலியவற்றை ஆளுமை பிரதிபலிக்கின்றதென்றால் தன்னம்பிக்கை இவற்றை மனதின் ஆழத்தில் உள்ளுறையாகக் கொண்டுள்ளது என்பதே பொருள். மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் போர்ப்பாசறையில் வீரர்கள் போருக்கான ஆயத்தபணிகளில் இருக்கும்போது பயமும், நம்பிக்கையும் மனதின் ஆழத்தில் உள்ளுறையாகச் செயல்படுவதை அவதானிக்க முடியும். மதுரைக் காஞ்சியும் எழுவரை வெற்றி கொண்ட போதும் கொடை வழங்கும் திறத்திலும், வீரம், கருணை, ஒருங்கிணைக்கும் பாங்கு, புலப்படுகிறது. வீரர்களின் ஆற்றல் வாய்ந்த ஊக்கிகளையும் பதிவு செய்திருப்பதும் நுட்பமானது.

**"வயக்களிறு பார்க்கும் வயப்புலி போல**
**துஞ்சாக் கண்ணர், அஞ்சாக் கொள்கையர்**
**அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர், செறிந்த**
**நூல்வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி**
**ஊர் காப்பாளர், ஊக்கருங்கணையினர்"** (ம.கா., 645...)

**சுயமான செயல்கள் (Autonomous Functions)**

தன்னம்பிக்கையின் முக்கிய வெளிப்பாடு, சுயமாகச் செயல்களைச் செய்வது சூழலுக்கேற்ப மனிதனின் முடிவெடுக்கும் (Judgement) ஆற்றல் பண்பை ஸ்கின்னர் 'தானியங்கு ஆக்கநிலை' என்கிறார். இந்த ஆக்கநிலை மனிதனுக்குள் வளர வளர அவனது அனுபவங்களும் துணை நிற்க அவனுடைய மேல்மனம் துலக்கமாக இயங்கும். அது தன்னம்பிக்கையால் மட்டுமே கைகொள்ளப் பெறும். மதுரைக் காஞ்சியில் பாண்டிய மன்னன் எடுக்கும் போர் முடிவுகள், பரதவர் போன்ற பகைவரை அடக்கி அறநெறிப்படுத்தும் செயல், மருதநில வலைஞர்களின் இயல்பு, பாணர்களின் தனித்துவமான பண்புகள், நெடுநல்வாடையில் செவிலித்தாயின் தனித்த கொற்றவை வழிபாடு, தச்சனின் கலைத்திறன் போன்ற பதிவுகள் சுய முடிவுகளை எடுத்து இயங்கும் போக்குகளாக இருக்கின்றன. அந்த அடிப்படையில் இரண்டு பிரதிகள் காட்டும் தனிமனிதச் சுய முடிவுகள் அகமியை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

கடல் வளம் மிகுந்த சாலியூரைக் கொண்ட வெற்றியை

**"கடுங்காலொடு கரை சேர**
**நெடுங் கொடி மிசை இதை எடுத்து**
**இன் இசைய முரசம் முழங்க'**

என்பது கவனிக்கத்தக்கது. இவ்வெற்றியைத் திட்டமிட்டு நகர்த்தியவன் நெடுஞ்செழியன். அவனது 'தானியங்கு ஆக்கநிலை' இங்கு புலப்படுகிறது.

**தகவமைக்கும் செயல்கள் (Adaptive Function)**

சூழலுக்கு ஏற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ளாத உயிரினங்கள் அழிந்து விடுகின்றன. "ஒத்து வாழ் அல்லது அழிந்து போ" என்பதே வரலாற்றின் அடிப்படை. 'Survival of the Fittest" என்றார் சார்லஸ் டார்வின். "புலனறிதல், கற்றல், நினைவாற்றல், சிந்தித்தல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல், புலன்உணர்தல், வளர்தல், மற்றவரிடமிருந்து வேறுபடுதல், மற்றவர்களுடன் உறவு கொள்ளுதல், அதைப் பேணல் போன்ற நிகழ்வுகளை எப்படிச்செய்கிறோம் என்பதைப் பொறுத்தே மனித வளர்ச்சி இருக்கிறது என்கிறார் ப்ராய்ட்[4]. யதார்த்தம் குறித்த புலன் உணர்வும் நடைமுறை அறிவும் (Sense of Reality) இருந்தால் மட்டுமே மனிதன் தன்னை அடுத்த தளங்களை நோக்கி நகர்த்த முடியும். மற்றமையுடனான உணர்வு உறவு மட்டுமல்ல, பொருள் உறவும் (Object Relations) இங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இரண்டு உறவுகளையும் மனிதன் ஆரோக்கியமானதாகப் பேணும்போது மட்டுமே அவன் தாழ்வு உணர்ச்சியை எட்டாமல் தன்னம்பிக்கையோடு இயங்க முடியும். மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் மானுடம் புறச்சூழலுக்குத் தக்கத் தகவமைந்து முன்னகர்வதைக் காட்டுகின்றன. கூதிர்கால இயற்கை மாற்றங்களுக்கேற்ப கோவலர்கள் தங்களையும் தங்கள் உடமைகளையும் பாதுகாக்கப் பெயர்தல், பெண்கள் மனைகளில் வாடைக்கேற்ப தங்களைத்

திருத்திக்கொளல், பாசறையில் அரசனும் வீரர்களும் தங்களைப் புணருத்தாரம் செய்ய முயல்தல் எனத் தகவமைந்து வாழ்வது குறிப்பிடத்தக்கது.

**"கூந்தல் மகளிர் கோதை புனையார்,**
**பல் இருங் கூந்தல் சில்மலர் பெயம்மார்,**
**தண் நறுந் தகர முளரி நெருப்பு அமைத்து ... (நெ.நல்., 53...)**

மதுரைக்காஞ்சியில் ஐவகை நிலங்களின் இயல்புகேற்ப மக்கள் வாழத்தூண்டல், பௌத்த, சமண மரபுகளைப் பின்பற்றி அறத்தைப் பொருந்தி வாழ்வதற்கான தேவைகளை வலியுறுத்தல், சூல் கொண்ட மகளிர் தேவராட்டியுடன் நின்று தெய்வங்களுக்குப் படையல் தந்து வழிபடுதல் போன்ற தகவமப்புக்களைப் பார்க்க முடிகிறது.

**"கடுஞ்சூல மகளிர் பேணி, கை தொழுது,**
**பெருந்தோட் சாலின மடுப்ப... (.610)**

**ஊக்கிகளை முறைப்படுத்திக் கட்டுப்படுத்துதல் (Regulation And Contol of Drives)**

லெனின் "மனிதன் குரங்கிலிருந்து பிறந்து கொண்டிருக்கிறான்" என்றார். மனிதன் சமூகவயப்பட்ட விலங்கு. வன்முறை என்பது உடலைத் தாக்குவது மட்டுமல்ல. இன்னொரு ஆன்மாவைக் காயப்படுத்துவதும் வன்முறைதான். மனிதனின் வளர்ச்சிக்கு அடிப்படையான ஆற்றல், அறிவு, உழைப்பு, பகுத்தறியும் திறன், நகை, போட்டி, தொடர்புகொள்ளும் பண்பு போன்ற ஊக்கிகள் தன்னைச் சுற்றி இருப்பவர்களைக் காயப்படுத்த, தண்டிக்க, அவமானப்படுத்த, கீழ்மைப்படுத்த, சிதைக்க பெருவிருப்பம் கொண்டு (Sadist) இயங்க ஆரம்பித்து விடுகின்றன. இந்நோய்க் குறிகளை மடைமாற்றி ஆற்றல்சார் ஊக்கிகளை முறைப்படுத்தும் ஆற்றல் இருந்தால் மட்டுமே மனிதன் அவன் மீதும் சமூகத்தின் மீதும் நம்பிக்கை கொள்கிறான். "பிறரின் உணர்ச்சிப் பெருக்குகளைப் (Emotions) புரிந்துகொண்டு, தன்னை அவற்றுடன் அடையாளப்படுத்திக்கொண்டு (Empathy) உறவுகளில் புத்திசாலித்தனத்துடன் நடந்துகொள்ளுதல் என்பது சமூக அறிவுத் திறனாகும். அதாவது 'Social Inteligence' என்கிறார் எல். தார்ண்டைக்[5]. மதுரைக் காஞ்சி முன் வைக்கும் காஞ்சித்திணைக்கான அறநெறிகளை இங்குக் கவனப்படுத்தலாம், பாண்டி நாட்டில் பகை, நட்பு, நொதுமல் என்ற மூன்றிடத்தும் வேறுபாடின்றி ஒப்பக் கருதும் நடுவு நிலை உள்ளம் உடையவர் நீதி உடையவர் என்று ஊக்கிகளை நெறிப்படுத்தும் பாங்கைப் பிரதிபலிக்கிறது.

**".... தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து,**
**வானமும் நிலனும தாம் முழுது உணரும்**
**சான்ற கொள்கை, சாயா யாக்கை**
**ஆன்று அடங்கு அறிஞர் செறிந்தனர். (ம. கா. 477...)**

இது முறைசார் ஊக்கிகளை ஆற்றுப்படுத்தும் செயலாக இருக்கிறது.

**'நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்**
**சிலரொடு திரிதரும் வேந்தன்**
**பலரொடு முரணிய பாசறைத் தொழிலே" (நெ.நல்., 186...)**

பலர் தடுத்தும் பாசறையில் வேந்தன் வலம் வருதல் அவனது திடத்தை மட்டுமல்ல அவனது மனபலம் எனும் ஊக்கியை செயல்படுத்தும் தன்மையைக் காட்டுகிறது.

**தற்காப்புக் கூறுகள் (Elements of Defence)**

மனிதனின் உடன்பிறந்த அச்சம், அவனது ஆழ்மனதில் உறைந்திருக்கும் இது அவனது வாழ்நாள் முழுவதும் அவனைத் தொடர்வது, இயற்கையின் அதிசயம். மரணம், உடமை இழப்பு, உடல்நசிவு, பொருள் இழப்பு, பிற உயிரினங்களில் இருந்து பாதுகாப்பற்ற நிலை என இது பல முகங்கள் கொண்டதாக மனிதனோடு ஒன்றிணைந்து இயங்குகிறது. எனவே, தனிநபர் உளவியலில் 'வாழ்க்கைப் பாதுகாப்பு (Life Security), போராட்டம் (Conflict), அச்சம் (Fear) போன்றவை உள்ளத்தின் முக்கியச் செயற்பாடுகளாகின்றன' என்கிறது. மேலும் தற்காப்புணர்ச்சி என்றால் தன்னைக் காத்துக் கொள்வதை மட்டும் குறிக்காது. மாறாக, தான் சார்ந்திருக்கும் சமூகத்தைக் காப்பதையும் குறிக்கும். மனித ஈகோ அதையே செய்கிறது[6]. மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் காட்டும் பாண்டியன், வீரர்கள், சான்றோர்கள் என அனைவரும் தன்சார்ந்த புறவுலகைக் காப்பாற்றப் போராடுகிறார்கள். பாண்டியனிடம் தற்காப்புப் படிமுறை உளநிகழ்வாக (Mental Phenomenan) இயங்குகிறது. பாசறையில மன்னன் உலாவருவது அவனது defensive process யைக் கட்டாய பணியாகக் காட்டுகிறது.

**"களிறு களம் படுத்த பெருஞ்செய் ஆடவர்,**
**ஒளிறு வாள் விழுப்புண் காணிய, புறம்போந்து,**
**வடந்தைத் தன் வளி எறிதொறும் நுடங்கி**
**தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய.... (நெ. ந., 171..)**

வீரர்களின் செயல்பாடுகள் Defesive Maganisam ஆக இயங்குவதைப் பார்க்க முடிகிறது. பாண்டிமாதேவியின் அமுக்க உணர்வு கனவுப் புனைவில் இயங்கி தன்னைப் பாதுகாக்க முனைகிறது. Self Defensive என்பது Magical Existance ஆக மாறுகிறது.

**"புனையா ஓவியம் குடுப்பப் புனைவு இல்**
**தளிர் ஏர் மேனி, தாய சுணங்கின்**
**அம் பணைத் தடைஇய மென் தோள், முகிழ, முலை,**
**வம்பு விசித்து யாத்த, வாங்கு சாய் நுசப்பின்... (நெ.ந., 147...)**

இது தலைவனுக்காக காத்திருக்கும் பெண்களிடம் இயங்குவதைப் பார்க்க முடிகிறது. இது மடைமாற்றமாக கொற்றவை வழிபாட்டில் முடிகிறது என்பது கவனிக்கத்தக்கது.

**அடையாள உருவாக்கம் (Identity Formation)**

மற்றவர்களின் பார்வையில் நாம் என்னவாக இருக்கிறோம் என்ற அடையாளப்படுத்தலை நோக்கிய மனிதனின் நகர்வு முக்கியயமானதாக இருந்தாலும் அவனுக்குள் இருக்கும் இயல்புணர்வுத் தூண்டல்களும் ஆக்கநிலைச் செயல்பாடுகளுமே அவனைச் சமூகத்தில் அடையாளப்படுத்துகின்றன. தன்புலனறிவு சார்ந்து, புறஉலகில் அவனது வெளிப்பாடு, சமூக அசைவாக்கங்களில் ஏற்படுத்தும் மாற்றங்கள் அவனை அடையாளப்படுத்துகிறது. அது தனி அடையாளம், குழு அடையாளம் எனப் பகுத்துப் பேசப்படுகிறது. மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் இவ்விரு அடையாளங்களையும் பதிவு செய்துள்ளன. நாளங்காடி, அல்லாங்காடி வியாபரிகளின் வியாபார நேர்மை, ஏழு மன்னர்களை

வெற்றிகொண்ட நெடுச்செழியனின் வெற்றி, கொடைப்பெருமை, அறப்படுத்தும் அடையாளங்கள், குழுவையும் தனிமனிதத் தன்னிலைகளையும் வரையறை செய்கின்றன.

**“அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்**
**பெரியோர் மேஎய் இனிதின உறையும்**
**குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்”** (471...)

மதுரையின் அடையாளங்களாக வருணிக்கப்படும் உறங்கா நகரம், ஓசைகொண்ட நகரம், வியாபார நகரம் போன்றவை அடையாளப்படுத்தலின் இன்னொரு பரிணாமத்தைக் காட்டுகின்றன. ஆக இன்றும் தொடர்வதைக் காண முடிகிறது.

**“மழை கொளக் குறையாது புனல் புக மிகாது**
**கரைபொருது இரங்கும் முந்நீர் போல...** (424..)

என்பவை மதுரைக் காஞ்சியில் துலக்கமாக இருக்கின்றன. நெடுநல்வாடையில் செவிலித்தாயின் இறைத்தேடல், பணிப்பெண்டிர்களின் பாண்டிமாதேவியினை ஆறுதல்படுத்தும் பணி, யவனர்களின் உடல்கட்டு, நெடுஞ்செழியனின் வெற்றிச் சிறப்பு போன்ற அடையாளப்படுத்தல்கள் குறிப்பிடத்தக்கன.

**“வேம்பு தலை யாத்த நோன்காழ் எஃகமொடு**
**மன்னோன் முறைமுறை காட்ட, பின்னர்**
**மணிபுறத்து இட்ட மாத்தட் பிடியொடு........**
**வாள் தோட் கோத்த வன்கண் காளை...** (176.....)

எனத் தனித்துவமான அடையாளப்படுத்தல்களும் குழு அடையாளங்களும் மிகத் துலக்கமாக இருக்கின்ற. இவ்வடையாள உருவாக்கங்களே ஒரு மனிதனுக்குத் தன்னம்பிக்கையைப் பெருக்குகின்றன. வாழ்வின் மீதான தீராக் காதலை அதிகரிக்கின்றன.

**முடிவாக...**

ஆளும்திறன்கள், சுயமான செயல்கள், தகவமைக்கும் செயல்கள், ஊக்கிகளை முறைப்படுத்திக் கட்டுப்படுத்துதல், யதார்த்தம் குறித்த புலன் உணர்வு, நடைமுறை அறிவு, தற்காப்புக் கூறுகள், மற்றமை உறவு, அடையாள உருவாக்கம், சிந்திக்கும் முறை போன்ற உளவியல் கூறுகள் ஒரு மனிதனின் மனத்தைக் கட்டமைப்பவைகளாக இருக்கின்றன. அவை மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை ஆகியவற்றின் கதைப்பரப்பிலும் கதாமாந்தர்களின் செயல்பாடுகளிலும் உறைந்துகிடப்பதை பார்க்க முடிகிறது. இவை விரிப்பின் பெருகும்.

**குறிப்புக்கள்**

1. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பா. 21.,
2. சங்கஇலக்கியம், பத்துப்பாட்டு, இரண்டாம் பாகம், NCBH, சென்னை.
3. ஔவையின் உளவியல்–ப்ராய்டு–லெக்கானின் மன அலசல், ஐ.க. பாண்டியன், ப.44
4. உளவியல், கில்லியன் பட்லர், பிரிதா மெக்மனஸ், ப.5.
5. மு.நூ., ப. 62.
6. சிக்மண்ட் ப்ராய்ட்; உளப்பகுப்பாய்வு அறிவியல், தி.கு. இரவிச்சந்திரன், (மொ.பெ) ப.207.